# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,041 — 1919 ம் ஹூ ஆவணிமீ 1 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்துமாகிய ஐக்கிய இராச்சியத்திற்கும் கடல்களுக்கப்பாலுள்ள பிரித்தானிய ஆதிபத்தியங்களுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவம்பொருந்திய ஐந்தாம் ஜோர்ஜ அரசர் நாமத்தினாலே:

மகா கீர்த்திபொருந்திய சென்ற் மைக்கலும் சென்ற் ஜோர்ஜ் என்னும் வரிசையின் நைற் கொம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும், பிரித்தானிய இராச்சிய உன்னத வரிசையின் நைற் கொம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும், மகா கௌரவம் பொருந்திய பாத் என்னும் வரிசையின் கொம்பானியன் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத் தீவுக்கும் அதனைச்சேர்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய உத்தமனார் சேர் உவில்லியம் ஹென்றி மனிங் அவர்களால் செய்யப்படும்

### விளம்பரம்.

டபிள்யு. எச். மனிங்.

குருநாக்கல் பிரிவின் பாடசாலைச் சங்கத்தவர்கள், 1907 ம் ஆண்டின் நாட்டுப்புறத்துப் பாடசாலைச்சட்டத்தின் 19 ம் பிரிவினால் தங்களில் கொடுக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு தங்களால் உண்டாக்கப்பட்டு 1917 ம் ஆண்டின் 34 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பெற்ற மேற்சொல்லிய 1907 ம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவின் கீழ்ப்பிரிவு (1) (*b*) யின் பிரகாரம் அதிகார மந்திர சபையோடுகூடிய தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, 1916 ம் ஆண்டு வைகாசிமாதம் 29 ந் திகதியின் விளம்பரத்தினால் அவ்வருஷம் ஆனி மாதம் 2 ந் திகதியின் 6,796 ம் இலக்க அரசாட்சியாரின் "கெசெற்" பத்திரிகையில் வெளியரங்கப்படுத்தப்பட்ட உபவிதிகளில் 3 ம் உபவிதியைத் திருத்தியபடியினாலும், 20 ம் பிரிவின் கீழ்ப்பிரிவு (*i*) (*a i*) யின் பிரகாரம் 8 ம் இலக்கத்தைக்கொண்ட ஓர் உபவிதியை மேற்குறித்த உபவிதிகளுடன் சேர்த்திருக்கிறபடியினாலும்.

சகலரு மறியவேண்டிய தென்னவானால், தேசாதிபதியாகிய நாம் எமக்கு மேற்சொல்லிய சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவினால் கொடுக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டும், அதிகார மந்திரசபையாரது ஆலோசனையுடனும் மேற்கூறிய 3 ம் உபவிதியை கீழே காட்டும் அட்டவணையின் பிரகாரம் திருத்துவதையும் அதே அட்டவணையின் பிரகாரம் 8 ம் இலக்கத்தையுடைய உபவிதியைச் சேர்ப்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

எங்கள் ஆண்டவரின் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தனாலாந் திகதியிலன்று இலங்கைத்தீவில் கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனாரது கட்டளைப்படி,

ஏ. எஸ். பெக்டன்,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

அரசரைக் கடவுள் காத்தருள்க.

---

மேற்சொல்லிய அட்டவணை.

1. 3 ம் உபவிதியின் 1 ம் வரியில் 12 என்றிருக்கு மிலக்கத்தை 14 என்னு மிலக்கமாக மாற்றவேண்டும்.

2. 3 ம் உபவிதிக்கு பின்னால் வரும் விலக்குக்குறிப்பைச் சேர்க்கவேண்டும். 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகளுக்கு டிஸ்திறிக் பாடசாலைச் சங்கத்தலைவர் வேளாண்மை செய்யுங் காலத்தில் அல்லது வேறு நியாயமான காரணத்துக்காக சொற்ப காலத்துக்கு பள்ளிக்கூடத்துக்கு வராமலிருக்க உத்தரவு கொடுக்கலாம்.

3. கீழ்வரும் உபவிதிக்கு 8 இலக்கமிட்டுச் சேர்த்துக்கொள்ளவேண்டும். "முன் தம்மால் பள்ளிக்கூடமாகப் பாவிக்கப்படாத ஓர் கட்டிடத்தில் அல்லது ஓர் பள்ளிக்கூட அறையில் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வயதுள்ள பிள்ளைகளுக்கு இங்கிலீசில் அல்லது வேறெந்தப் பாஷையிலாவது படிப்பூட்ட அல்லது ஓர் பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்க விரும்புபவர் தாமப்படிப்படிக்பிக்க அல்லது பள்ளிக்கூட வேலை துவங்க குறைந்த அளவில் ஒரு மாதத்துக்கு முன்னர் ஆகக்கிட்டவாயுள்ள பள்ளிக்கூடச் சோதனைகாறனுக்கு அல்லது கீழ்ச் சோதனைகாறனுக் கறிவிக்கவேண்டும். அதன்பின் தம்மாணவரின் வகுப்புகளைப்பற்றியும் தாமவர்களுக்குக் கற்பிக்கவிருக்கும் கல்வியைப்பற்றியும் வித்தியாகர்த்தர் வேண்டிய விபரங்களைக் கொடுக்கவேண்டும்.

மேற்காட்டிய திருத்தல்களும் சேர்த்தல்களும் குருநாகல் பிரிவின் பாடசாலைச் சங்கத்தவரால் 1918 ம் ஆண்டு க்ரர்த்திகை மாதம் 30 ந் திகதி கூடிய கூட்டத்தி லுண்டாக்கப்பட்டன.

சீ. ஆர். கம்பர்லன்ட்,
டிஸ்திறிக் பள்ளிக்கூடச் சங்கத்தலைவர், குருநாகல்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துறைமுகத்திலிருந்து றயில்பாதை போடுகிற என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 16,998. குறிச்சி—கொட்டகேனை.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொறலியவெல .. | புல்வயல் .. | சி. ஞானசேகரம் .. | 0 | 0 | 0·65 |
| 2 | ஷை .. .. | ஷை .. | எ. டி. எ. செனிவரத்தின .. | 0 | 3 | 32·37 |
| 3 | எல .. .. | எல .. | ஷை .. .. | 0 | 0 | 5·18 |
| 4 | கொறலியவெல .. | புல்வயல் .. | ஷை .. .. | 1 | 1 | 1·95 |
| 5 | ஷை .. .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 26·10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ ஒகஸ்ட்மாசம் 25 ந் தேதியிலன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1919 ம் ௵ ஜூலை௴ 29 ௳.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,321, களுத்துறை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துபேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1919 ம் ௵ (ஆகஸ்ற்) ஆவணி௴ 1 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ப்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத்-தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகஸ்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

குறிப்பு.—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

என். ஏ. காம்ப்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்டுங்கோறளை மேற்கிலிருக்கும் வலல்லாவித்திப்பத்திலுள்ள, பன்னிலக் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இலங்கையளவைப் பிரதமப்படம் 71.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 137A .. | அம்பதென்னடொல (சிற்றுறு) .. .. .. | 0 | 0 | 25 |

எல்லைகளாவன: வடக்கு-324,137 ம் உ. ப. ல் காணுங் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட அம்பதென்னடொல (சிற்றுறு), 275,106 ம், 187,703 ம் உ. ப. களில் காணுங் காணிகள்; தெற்கு-பறைகமக் கிராம வெல்லை, மேற்கு-187,703 ம், 275,106 ம், 187,703 ம், 275,106 ம் உ. ப. களில் காணுங் காணிகள்.

* இங்கிலீசின் மூன்றாம் பாகம் 1080—1085 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

II.—இலங்கையளவைப் பிரதமப்படம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 139A .. | கனுனஎல (சிற்ருறு) .. .. .. .. | 0 0 14 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கனுனஎல; கிழக்கு-82,165 ம் உ. ப. ல் காணுங் காணி, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு, 82,165 ம் உ. ப. ல் காணுங் காணி; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கனுனஎல (சிற்ருறு), 82,165 ம் உ. ப. ல் காணுங் காணியின் பகுதி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு, 82,165 ம் உ. ப. ல் காணுங் காணி.

III.—இலங்கையளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 139C .. | கனுனஎல (சிற்ருறு) .. .. .. .. | 0 0 18 |

எல்லைகளாவன: வடக்கு-153,679 ம், 105,976 ம், உ. ப. களில் காணுங் காணிகள்; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கனுனஎல (சிற்ருறு); தெற்கு-105,976 ம், 153,679 ம் உ. ப. களில் காணுங காணிகள்; மேற்கு-கனுனக் கிராம வெல்லை.

IV.—இலங்கையளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 140A .. | பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு .. .. .. | 0 0 38 |

எல்லைகளாவன: வடக்கு-82,186 ம் உ. ப. ல் காணுங் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு; தெற்கு-82,186 ம் உ. ப. ல் காணுங் காணி, பன்னில கல்வலத் தோட்டப்பாதை, 82,186 ம் உ. ப ல் காணுங் காணி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு.

V.—இலங்கையளவைப் பிரதமப்படம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 140C .. | பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு .. .. | 0 0 29 |

எல்லைகளாவன: வடக்கு-82,165 ம் உ. ப. ல் காணுங் காணி, கனுனஎல, 82,165 ம் உ. ப. ல் காணுங் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு; தெற்கு-82,165 ம் உ. ப ல் காணுங் காணி, கனுனஎல, 82,165 ம் உ. ப. ல் காணுங் காணி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு.

VI.—இலங்கையளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 140E .. | பன்னிலஇற்றப்பனக் குறுக்குரோட்டு .. .. | 0 0 6 |

எல்லைகளாவன: வடக்கு-82,165 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு; தெற்கு-82,165 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு.

VII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 140G .. | பன்னில இற்றப்பனக் குறுக்கு ரோட்டு .. .. | 0 0 26 |

எல்லைகளாவன: வடக்கு-105,976 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கபட்ட பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு; தெற்கு-105,976 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில இற்றப்பனக் குறுக்குரோட்டு.

VIII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 142A .. | எல்லடொல (சிற்ருறு) .. .. .. .. | 0 0 11 |

எல்லைகளாவன: வடக்கு-258,503 ம், 258,504 ம் உ. ப. களில் காணும் காணிகள்; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட எல்லடொல; தெற்கு-258,504 ம், 258,503 ம் உ. ப. களில் காணும் காணிகள்; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட எல்லடொல.

IX.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 146A .. | மில்லகாயுடுமுலடொல (சிற்ருறு) .. .. .. | 0 0 6 |

எல்லைகளாவன: வடக்கு-196,965 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மில்லகாயுடுமுலடொல; தெற்கு-196,965 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-196,965 ம் உ. ப. ல் காணும் காணியின் பகுதி.

X.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 147 .. | பன்னிலஎல (சிற்ருறு) .. .. .. .. | 0 0 20 |

எல்லைகளாவன: வடக்கு-டுவெஎல, லெவன்டுவக் கிராம வெல்லை, டுவஎல, நட்டஎல; கிழக்கு-நட்டஎல, 224,609 ம், 224,610 ம் உ. ப. களில் காணும் காணிகள், பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில எல; தெற்கு-224,610 ம் உ. ல் காணும் காணி; மேற்கு-224,609 ம் உ. ப. ல் காணும் காணி.

XI.—இலங்கை யளவைப் பிரதம படம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 147B .. | பன்னிலஎல (சிற்ருறு) .. .. .. .. | 0 0 8 |

எல்லைகளாவன: வடக்கு-80,868 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென்த் தீர்க்கப்பட்ட யுடுவில்டொல (சிற்ருறு); தெற்கு-80,868 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னிலஎல (சிற்ருறு).

XII.—இலங்கை யளவைப் பிரதம படம் 71.

| காணித் துண்டு. | காணிப் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 147D .. | யுடுவிலடொல (சிற்ருறு) .. .. .. .. | 0 1 33 |

எல்லைகளாவன: வடககு-80,870 ம், 82,305 ம் உ. ப. ல் காணும் காணிகளும், 82,305 ம் உ. ப. ல் காணும் காணி யின் பகுதியும்; கிழககு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட யுடுவில்டொல (சிற்ருறு); தெறகு-82,305 ம், 80,870 ம் உ. ப. ல் காணும் காணிகள்; மேற்கு-திம்பிறிகாகேனெடொல (80,870 ம் உ. ல் காணுங் காணி), பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட யுடுவிலடொல.

XIII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 150 .. | கிதுல்பிதிவெலடொல (சிற்ருறு) .. .. .. | 0 0 12 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னிலஎல (சிற் ருறு); கிழக்கு-87,706 ம் உ. ப. ல் காணும் காணி; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க் கப்பட்ட கிதுல்பிதிவெலடொல (சிற்ருறு); மேற்கு-87,706 ம் உ. ப. ல் காணும் காணி.

XIV.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 151A .. | பன்னில—கல்வலக் கிராமப்பாதை .. .. .. | 0 0 2 |

எல்லைகளாவன: வடக்குங் கிழக்கும்-82,187 ம் உ. ப. ல் காணும் காணி; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னிலகல்வலக் கிராமப் பாதை; மேற்கு-எஸ். சுவாமிசப்பு வுரித்தாடும் டெல்கா வலகடவத்த, 82,187 ம் உ. ப. ல் காணுங காணி, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில கல்வலக் கிராம வெல்லை.

XV.—இலங்கையளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 151C .. | பன்னில—கல்வலக் கிராமப் பாதை .. .. .. | 0 0 17 |

எல்லைகளாவன: வடக்கு-பன்னில—இற்றப்பனக் குறுக்கு ருேட்டு; கிழக்கு-145,086 ம் உ. ப. ல் காணுங் காணி; தெறகு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பன்னில—கல்வலக் கிராமப்பாதை; மேற்கு- 145,086 ம் உ. ப. ல் காணுங் காணி.

XVI.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 151D .. | பன்னில—கல்வலக் கிராமப்பாதை .. .. .. | 0 0 3 |

எல்லைகளாவன: 125,883 ம் உ. ப. ல் காணுங் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரிய தெனத் தீர்க்கப்பட்ட பன்னில—கல்வலக் கிராமப் பாதை; தெற்கு-125,883 ம் உ. ப. ல் காணுங் காணி; மேற்கு-பன்னி ல—கல்வலக கிராமப் பாதை.

XVII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 153A .. | கலஸ்ஸெகேனடொல (சிற்ருறு) .. .. .. | 0 0 3 |

எல்லைகருவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கலஸ்ஸெகேன டொல (சிற்ருறு); கிழக்கு-80,895 ம் உ. ப. ல் காணுங் காணி; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரிய தெனத் தீர்க்கப்பட்ட கலஸ்ஸெகேனடொல (சிற்ருறு); மேற்கு-80,895 ம் உ. ப. ல் காணுங் காணி.

XVIII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 71.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 154 .. | திம்பிறிகாகேனெடொல (சிற்ருறு) .. .. .. | 0 0 34 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட யுடுவிலடொல (சிறருறு); கிழக்கு-80,870 ம், 82,305 ம் உ. ப. களின் காணிகள், பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிககுரியதெனத் தீர்ககப்பட்ட திம்பிறிகாகேனெடொல (சிறருறு); தெறகு-82,305 ம் உ. ப. ல் காணுங் காணி; மேறகு-80,870 ம் உ. ப. ல் காணுங் காணி.

[களுத்துறை வி. உ. 14—1919.]

---

[அறிவித்தல் இல. 7,322, யாழ்ப்பாணம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாரு மிருந்தால், அவர்கள் 1919 ம் ஷு (ஆகஸ்ற்) ஆவணிமீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்துக்குள், 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

குறிப்பு:—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வட மாகாணம், மன்னார் டிஸ்திறிக்கைச்சேர்ந்த இலுப்பைக்கடவைப்பத்திலும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கைச் சேர்ந்த பூனகரிப் பிரிவுலுமுள்ள குமுளமுனை, பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, முளங்காவில், நாகப்படுவன், தென்னியன் குளம், வெள்ளாங் குளம், என்னுங் கிராமங்களிலுள்ளதும், 5,140 ம் பிரதமபடத்தில் 1 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தப்படியே 10,335 ஏக்கர் 33 பேட்ச விசாலங்கொண்டதும் நாகப்படுவன் காட்டுச் சேமிப்பு, முளங்காவில், கொல்லன்வில், போனவில், கதிராவில், நாவடுவன்வில், கத்திக்குளம், (அடிப்பாதையுங் கரத்தைப் பாதையுமுள்பட) என்னும் பெயர்களினால் பொதுவாக வழைக்கப்படுவது அல்லது அறியப்படுவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-ஒரு கரத்தைப் பாதை, வெளி நிலம், முடிக்குரிய பத்தைக்காடு, முடிக்குரிய சோலைக் காடு; கிழக்கு-பூனகரியிலிருந்து துணுக்காய்க்குப் போகும் பிரதம றோட்டுச் சேமிப்பு (றோட்டு மத்தியிலிருந்து 50 சங்கிலிக் கோவை); தெற்கு-ஒரு கரத்தைப் பாதை, முடிக்குரிய சோலைக் காடு, வெளி நிலம், முடிக்குரிய சோலைக் காடு, வெளி நிலம், முடிக்குரிய சோலைக் காடு, வெளி நிலம்; மேற்கு-மன்னாரிலிருந்து பூனகரிக்குப் போகும் பிரதம றோட்டுச் சேமிப்பு (றோட்டு மத்தியிலிருந்து 50 சங்கிலிக் கோவை). முளங்காவில் மடத்துக்குப் பிரித்து விடப்பட்ட நிலமும் பிறவும், மன்னாரிலிருந்து பூனகரிக்குப்போகும் பிரதம றோட்டுச் சேமிப்பு (றோட்டு மத்தியிலிருந்து 50 சங்கிலிக் கோவை).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1086 ம் பககத்தின் படத்தைப் பார்க்குக.

[யாழ்ப்பாணம் வி. உ. 4—1919.]

---

[அறிவித்தல் இலக்கம் 7,323, அனுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுககுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1919 ம் ஹு (ஆகஸ்ற்) ஆவணிமீ 1 ந் தேதி துவக்கம் மூன்றுமாசத்திறகுள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏறபடுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

கவனிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனு முள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை யறிந்து கொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த நுவரகம் கோறளையைச்சேர்ந்த கல்கடவலத்துளானையில் திகனேகம என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே, 15 பேட்ச விசாலமுடையதும் 739 ம் இலங்கைஅளவைப் பிரதமபடத்தில் 41 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் வீரகாவத்த என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட திஸ்பம்ப; தெற்கு-கப்புறால கமறாலகே மெனிக்றாலவும் மறுபேரும் உரித்தாடும் பாலுகாவத்துயாய; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட திஸ்பம்ப.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1085 ம் பக்கத்தின் படத்தைப் பார்குக.

[அனுராசபுரம் வி. உ. 17—1919.]

---

[அறிவித்தல் இல. 7,324, ஊவா.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1919 ம் ஹு (ஆகஸ்ற்) ஆவணிமீ 1 ந் தேதிதுவககம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்து கொள்க.

கவனிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்து கொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

ஊவாமாகாணம் புத்தலப் பிரிவைச்சேர்ந்த கந்துக்காறகோறளையில் உல்விற்ற என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 9 பேட்ச விசாலங்கொண்டதும் 270 ம் இலங்கையளவை பிரதமபடத்தில் 12½A ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் காற்பாதை (பகுதி), என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-றத்னபால உன்னான்சே உரித்தாடும் பான்சாலவத்த, கிரிமலேக் கிராம எல்லை (கொஸ்கல்லே ஓயா), றத்னபால உன்னான்சே உரித்தாடும் பான்சாலவத்த; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட பான்சாலகாவதுவ; தெற்கு-காற்பாதை, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட பான்சாலகாவதுவ, றத்னபால உன்னான்சே உரித்தாடும் பான்சாலவத்த; மேற்கு-குனுகெற்றேஆற.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1087 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[ஊவா வி. உ. 9—1919.]

[அறிவித்தல் இல. 7,325, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ௵ (ஆகஸ்ட்) ஆவணிமீ 1 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறை கச்சேரியில் டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரிய தென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்வார்கள் என்பதை அறிந்துகொள்க.

சீ. வீ. பிறேயின்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணியின் விவரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் றைகம் கோறளேயில் முன்வத்தேபகேபத்துவிலுள்ள கல்தொட்ட என்னும் கிராமத்திலுள்ள இத்துடனணைத்திருக்கும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டு:—

பிரதமபடம் 14,681.

| காணித்துண்டு. | காணிப்பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 2333 | லெனேருககந்த | 6 3 28 |

எல்லைகளாவன: 281,049 ம், 269,543 ம் உரிமைப்படங்களில் விபரித்திருக்குங் காணிகள்; கிழக்கு-யக்கோபிற்றிகே பஸ்ரியனும் மற்றவர்களு முரித்தாடும் கந்தேவத்த; தெறகு-லேனகல விகாரவின் மாதம்ப சிலவான்சகுரு உரித்தாடும் லேனகல (14,681 ம் பிரதம படத்தின் 2,334 ம் துண்டுக் காணி), லெனேறிவிலுள்ள புத்த கோயிலுரித்தாடும் பான்சலவத்த; மேற்கு-யக்கோபிறறிகே கெந்திரிக் உரித்தாடும் கோங்காவத்த, ஜுவானிஸ் பெறறு ஜயதிலக்கவும் மற்றவர்களும் உரித்தாடும் கந்தபொடவத்த.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1087 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1919 ம் ஆண்டில் "இல்லேயடி உப்பை கொண்டுபோய் கற்பிட்டி குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டுத்துரையவர்களால் 1919 ம் ஆண்டு ஆவணிமாதம் 15 ந் தேதி பின்னேரம் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரர்கள் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள்:—

1. மழைபெய்தால் மழையில் நனையாமல் காப்பாற்றி சாக்குகளில் உப்பு போட்டு வாய்கட்டிக் கொண்டுவர வேண்டும்.

அரசாட்சியாரால் சாக்குகள் கொடுக்கப்படும்.

3. 1,000 அந்தருக்கு என்ன வீதமென்று விபரித்துக் காட்டியிருக்க வேண்டும்.

4. கொந்திறுத்துக்காரன் 4 நாள் அறிவித்தலில் உப்பைக் கொண்டு போகவேண்டியது.

5. நாள்தோறும் கொண்டுபோகவேண்டிய உப்பு இவ்வளவென்பதை கற்பிட்டி உப்பு இன்ஸ்பெக்டர் தீர்மானம்பண்ணுவார்.

6. கொந்திறுத்துக்காரனுக்கு அளவப்பட்ட உப்பு தொகையின் மதிப்பின்பேரால் ஒரு தொகைப் பணம் கொடுக்கக்கூடியதாயிருக்கும் மிச்சஉப்பு கையாடினதின்பின் கொடுக்கப்படும்.

7. கேள்விக்காரர் கேள்வி கேட்கமுன் புத்தளம் கச்சேரியில் ரூபா 5 கட்டவேண்டும்.

8. கொந்திறுத்து கேட்பவர் கொந்திறுத்தை ஒழுங்காய் நடப்பிக்கிறதற்கு பிணையாக ரூபாய் 200 கட்டவேண்டும். தவறினால் அந்த பிணைக்கு கட்டிய காசு பறிமுதலாக்கப்படும்.

9. கொந்திற அச்சு கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்காக கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாஙகளிருக்கும் இடத்தையும் புத்தளத்தின் மேல்விலாசத்தையும் கொடுக்க வேண்டும்.

10. கொந்திறுத்துக் கடதாசிகள் உடைக்கும் திகதியில் கொந்திறுத்துக்காரர் கச்சேரியில் இருக்கவேண்டும்.

11. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபொருந்த கணக்கு காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டுத்துரை அவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரர் தபால் வழியாக அனுப்பவேண்டும்.

(கையொப்பம்) எல். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசண்டுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1919 ம் ஆண்டு ஆடிமீ 28 ந் ௳.

---

தொழிலுக்கும்படாதவரின் அறிவித்தல்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருக்கும் சாமுவெல் மெந்திஸ் விக்கரமசிங்க ஆகிய நான், 1907 ம் ஆண்டு 1-வது ஆடினன்ஸ் 1 B பிரிவின்படி 2 ம் கட்டளைச்சட்டப்படி குருநாகல் டிஸ்திறிக்கில் இன்றையிலிருந்து மூன்று மாதங்களுக்குபின் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் வேலைபார்க்க றெஜிஸ்ற்றிரார் ஜனறல் துரை அவர்களிடம் மனுப்பண்ண எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

கொழும்பு, 1919 ம் ஆண்டு ஆடிமீ 18 ந் ௳.

எஸ். எம். விக்கரமசிங்க.

---

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமையச் செய்யப்படும் அறிவித்தல்.

சுண்ணாகம் அளவெட்டி தெற்கு சயம்பர் கந்தையாபிள்ளையாகிய நான் யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் தமிழ்ப் பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடத்துதற்குரிய கடைசிப் பரீட்சைக்குப்போகக் கொழும்புப் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்களுக்கு இதற்கு மூன்று மாதங்களின்பின் மனுப்பண்ண இருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

அளவெட்டி தெற்கு சுண்ணாகம், 1919 ம் ஆண்டு வைகாசிமீ 28 ந் ௳.

ச. கந்தையாபிள்ளை.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.